<u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மேட்டூர்.</u>

| | | | |
|---|---|---|---|
| அ.வ.எண். | 186/2021 | சாட்சி | வா.சா.1 |
| பெயர் | கேசவராஜ் | நாள் | 20.03.2025 |
| தகப்பனார் பெயர் | பதிசெட்டியார் | | |

<u>பிரதிவாதிகள் தரப்பில் வா.சா.1 ஐ குறுக்கு விசாரணை தொடர்ச்சி:–</u>

6) தற்போது என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.4 தொழில் வரி ரசீதில் சண்முகம் மற்றும் கேசவராஜ் ஆகிய இரு பெயர்கள் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால், சரிதான். அதேபோல் வா.சா.ஆ.5 மின் கட்டண ரசீதிலும் மேற்படி சண்முகம் மற்றும் கேசவராஜ் ஆகிய பெயர்கள் கூட்டாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால், சரிதான். மேற்படி சண்முகம் என்பவர் 1ம் பிரதிவாதியின் கணவர் என்றாலும், 2, 3 பிரதிவாதிகளின் தகப்பனார் என்றாலும், சரிதான்.

7) நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.6 தொழில்வரி ரசீது தாவா சொத்திற்கு தொடர்புடையது அல்ல என்றால், சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.8 புகார் ஆவணம் இவ்வழக்கிற்காக என்னால், தயாரிக்கப்பட்டது என்றாலும், அதில் கண்டுள்ளவாறு எவ்வித சம்பவங்களும் நடைபெறவில்லை என்றாலும், சரியல்ல. தாவா சொத்து எந்த வகையான வீடு என்றால், தார்சு வீடு ஆகும். என் வழக்குரை சொத்து விவரத்தில் மேற்படி தாவா வீடு தார்சு வீடு என குறிப்பாக சொல்லவில்லை என்றால், அது குறித்து எனக்கு தெரியவில்லை.

8) நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்களில் வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.5 வரையிலான ஆவணங்கள் என் பெயரிலும், என் சகோதரர் சண்முகத்தின் பெயரிலும், கூட்டாகத்தான் உள்ளது என்றாலும், என் பெயரில் தனியாக தாவா சொத்தை பொறுத்து ஆவணங்கள் எதையும் நான் தாக்கல் செய்யவில்லை என்றாலும், சரிதான்.தாவா சொத்து எனக்கும், என் சகோதரர் சண்முகத்திற்கும் கூட்டாக பாத்தியப்பட்ட சொத்து என்றால், சரிதான்.

9) தற்போது என்ன பரிகாரம் கோரி இவ்வழக்கை நான் தாக்கல் செய்துள்ளேன் என்றால், என் சகோதரர் உயிருடன் இருந்த காலத்தில் தாவா சொத்தை என் பெயருக்கு எழுதிக்கொடுப்பதாக ஒப்புக்கொண்டு, அதற்கு ஈடாக என் சகோதரர் பெயரில் நான் வேறு ஒரு சொத்தை என் சகோதரர் பெயரில் கிரயம் அளித்துவிட்ட நிலையிலும், அதற்கு பின்னிட்டு, என் சகோதரர் தாவா சொத்தை என் பெயரில் எழுதிக்கொடுக்காமலேயே இறந்துவிட்ட நிலையிலும், 1ம் பிரதிவாதி தாவா சொத்தில் வந்து, வீடு தன்னுடையது என்றும், நான் வெளியேற வேண்டும் என்றும், பிரச்சனை செய்வதால், மேற்படி தாவா சொத்து எனக்கே கொடுக்க வேண்டும் என பரிகாரம் கேட்டு இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன்.

10) நான் சொல்வது தவறானது என்றாலும், அவ்வாறு ஒரு போதும் என் சகோதரர் தாவா சொத்தை எனக்கு கொடுப்பதாக ஒப்புக்கொள்ளவில்லை என்றாலும், தற்போது என் சகோதரர் எனக்கு தாவா சொத்தை கொடுக்க உடன்பட்டதாக வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றாலும், சரியல்ல.

(பிரதிவாதிகள் தரப்பில் கேட்டுக்கொண்டதற்கிணங்க வா.சா.1 ஐ குறுக்கு விசாரணை தொடர்ச்சி வேறு ஒரு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது.)

ஒம்/-திரு. R.மணிவர்மன்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டூர்.